

# ஸ்ரீரங்கநாத பாதுகாஸஹஸ்ரம்

ஸ்ரீமதே லக்ஷ்மிந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அஸ்மத் குருப்யோ நம:

அஸ்மத் பரம குருப்யோ நம:



## ப்ரபாவ பத்ததி

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதாரக்கிக கேஸரீ

வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

**ச்லோகங்கள்:**

**33: வேத உபப்ருஹ்மண குதூஹலிநா நிபத்தம்**

**விஸ்வம்பரா ச்ருதிபவேந மஹர்ஷிணா யத்**

**வ்யாஸேந யத் ச மதுஸூதந பாதரக்ஷே**

**த்வே சக்ஷுஷீ த்வதநுபாவம் அவேக்ஷிதும் ந:**

**<u>பொருள்:</u>**

மது என்ற அசுரனை அழித்த க்ருஷ்ணனின் பாதுகையே! வேதங்களின் உண்மையான பொருளை உணர்ந்து கொள்வதில் சிரமம் அதிகம் ஆகும்.

அப்படிப்பட்ட வேதத்தின் பொருளை உலகிற்கு உணர்த்த எண்ணிய வ்யாஸ பகவான் மஹாபாரதத்தையும், வால்மீகி மஹரிஷி இராமாயணத்தையும் அருளிச் செய்தனர்.

இவை இரண்டும் பாதுகையாகிய உனது பெருமைகளை நாங்கள் காண்பதற்கு ஏற்ற இருகண்கள் போன்று உள்ளன.

**<u>விளக்கம்:</u>**

இராமாயணம், மஹாபாரதம் ஆகிய இரண்டிலும் பாதுகையின் பெருமை எவ்விதம் கூறப்பட்டது? இராமயணத்தில் இராமனின் பாதுகைகளைப் பரதன் தனது தலையில் தாங்கி அயோத்தி வந்தான்.

மஹாபாரதத்தில் க்ருஷ்ணனின் பாதுகைகளை உத்தவர் தனது தலையில் ஏற்று பத்ரிகாச்ரமம் வந்தார்.





**<u>ஸ்ரீ கிருஷ்ணர் - உத்தவர்</u>**

**34: ப்ரத்யக்ஷயந்தி பரிசுத்ததிய: யதாவத்**

**ராமாயணே ரகுபுரந்தர பாதரக்ஷே**

**சச்வத் ப்ரபஞ்சிதம் இதம்பரயைவ வ்ருத்த்யா**

**ஸம்க்ஷே ப விஸ்தரதசாஸு தவ அநுபாவம்**

**<u>பொருள்:</u>**

ஸ்ரீராமனின் பாதுகையே! ஸ்ரீமத் இராமாயணத்தில் பல இடங்களில் உனது பெருமைகள் சுருக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளன.

தெளிந்த அறிவை உடையவர்கள் இவற்றை உணர்கின்றனர். அவர்கள் உனது பெருமையை இவற்றின் மூலம் கண்ணால் காண்பது போன்று தெளிவாக அறிகின்றனர்.

**விளக்கம்:**

பதினான்கு ஆண்டுகள் ஸ்ரீராமனின் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து, அவனுக்கும் மேலாக இந்த உலகத்தைப் பாதுகைகள் ஆண்டன என்பதை அந்தக் காலகட்டத்தில் இருந்தவர்கள் கண்டனர் என்றார். அதனையே இராமாயணம் கூறுகிறது என்றார்.

**35: அல்பச்ருதைரபி ஜநை: அநுமீயஸே த்வம்**

**ரங்கேசபாது நியதம் நிகம் உபகீதா**

**ஸாரம் ததர்த்தம் உபப்ரஹ்மயிதும் ப்ரணீதம்**

**ராமாயணம் தவ மஹிம்நி யத: ப்ரமாணம்**

**பொருள்:**

ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! மிகவும் சிறிய அளவே வேதத்தைப் பற்றி அறிந்தவர்கள் கூட, "பாதுகையைப் பற்றி வேதத்திலே கூறப்பட்டுள்ளது", என்று கூறுகின்றனர்.

இது எப்படி சாத்தியம்? வேதங்களின் முழு அர்த்தங்களை வெளிப்படுத்தும் விதமாக உள்ள இராமாயணத்தில் உனது பெரேமைகள் பல இடங்களில் கூறியுள்ளதால் ஆகும்.

**விளக்கம்:**

வேதங்களை ஓரளவு அறிந்தவர்கள் என்ன நினைக்கின்றனர் என்றால், "பாதுகையைப் பற்றி வால்மீகி முனிவர் இராமாயணத்தில் மிகவும் பரக்கப் பேசியுள்ளார்.

வால்மீகியைப் போன்றவர்கள் எந்த ஒரு கருத்தைக் கூறுவதாக இருந்தாலும், அந்தக் கருத்து வதத்தில் கூறப்பட்டிருந்தால் மட்டுமே கூறுவார்கள்.

ஆக, பாதுகையைப் பற்றி இவர் கூறுவதன் மூலம், இதனைப் பற்றி வேதங்களின் நிச்சயமாகக் கூறப்பட்டிருக்கும்",
என்பதாகும்.......

*நா தைவம் தேசிகாத் பரம்*!!

*பாதுகாதேவி வருவாள்*....

*தாஸன் விஜயலக்ஷ்மி ஶ்ரீனிவாஸன்*.....

